**செய்தி வெளியீடு எண் : 1368** **நாள் : 12.07.2023**

**செய்தி வெளியீடு**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டத் துறைக்கு, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி IV போட்டி தேர்வு நடத்தப்பட்டு, தேர்வாகி உள்ள 151 நிலஅளவர்கள் மற்றும் வரைவாளர்களுக்கு, பணி நியமன ஆணை வழங்கும் விழா 12.07.2023 அன்று முற்பகல் 10.30 மணியளவில், இயக்குநர், நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டம், சர்வே இல்லம், சென்னை கூட்ட அரங்கத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்கள் கலந்து கொண்டு பணி நியமன ஆணைகளை பணியாளர்களுக்கு வழங்கி சிறப்புரை ஆற்றினார்கள்.

இவ்விழாவில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.குமார் ஜெயந்த் இ.ஆ.ப., அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் திரு. எஸ்.கே.பிரபாகர் இ.ஆ.ப., நில நிர்வாக ஆணையர் திரு.எஸ்.நாகராஜன் இ.ஆ.ப., நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் திரு.ப.மதுசூதன் ரெட்டி இ.ஆ.ப., மற்றும் நிலஅளவை பதிவேடுகள் துறை, கூடுதல் இயக்குநர் (பொ) திரு.அ.கண்ணபிரான், இணை இயக்குநர்கள், மண்டலத்துணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in